

மாநில இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் இலவச மருத்துவம் மற்றும் கண் சிகிச்சை முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தொடங்கி வைத்தார். தி.மு.க. மருத்துவ அணி மாநில துணைச் செயலர் மருத்துவர் திலீப்குமார் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தார். இந்நிகழ்ச்சியில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் சத்தியமூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ. முருகவேல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் வேல்முருகன் (முதுகுளத்தூர்). மருத்துவர் சுதர்சன் (ராமநாதபுரம்), முதுகுளத்தூர் பேரூராட்சி தலைவர் ஷாஜஹான், திமுக ஒன்றிய செயலாளர்கள் பூபதி மணி (முதுகுளத்தூர் கிழக்கு), கோவிந்தன் (முதுகுளத்தூர் மத்தி) ஆறுமுகவேல் (கடலாடி). குலாம் மைதீன் (சாயல்குடி கிழக்கு), ஜெயபாலன் (சாயல்குடி மேற்கு), இதம்பாடல் ஊராட்சி மன்றத்தலைவர் மங்களசாமி உள்பட முதுகுளத்தூர் சட்டமன்ற பணியாளர்கள் சத்தியேந்திரன், டோனி, ரஞ்சித் மணிகண்டன், உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## வ.உ.சி. துறைமுகத்தில் வெளிவட்ட

# சரக்குப் பெட்டக முனையத் திட்டப் பணிகளைத் தொடங்காதது ஏன்?

### மக்களவையில் – கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, டிச.8-

வ.உ.சி. துறைமுகத்தின் வெளிவட்ட சரக்குப் பெட்டக முனையத் திட்டத்தை அறிவித்துவிட்டு பணிகளைத் தொடங்காமல் இருப்பது ஏன்? எப்போது துவங்கு வீர்கள்? என மக்களவையில் கழகக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாட்டின் வ.உ.சி துறைமுகத்தில், வெளிவட்ட சரக்குப் பெட்டக முனையத்தின் திட்டப் பணிகள் தொடங்குவது எப்போது? பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி வசதியின் பணிகள் தொடங்குவது எப்போது? இதுபோன்ற பெரிய திட்டங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பை காண்காணிக்கவும், குறைக்கவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்பன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய துறைமுகம், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சகத்திடம் மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு :-

தமிழ்நாட்டின் வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தின் வெளிவட்ட சரக்குப் பெட்டக முனையத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்திற்கான அறிவிப்பு வெளியாகி நீண்ட நாட்கள் ஆன நிலையில், அதன் பணிகள் எப்போது தொடங்கி, எப்போது நிறைவடையும் என்ற கால வரையறையுடன் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தை நாட்டின் கிழக்குக் கடற்கரை பகுதியின் முக்கிய சரக்கு மாற்று மையமாக (Trans shipment Hub) மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அல்லது முன்மொழியப்பட்டுள்ள திட்டங்கள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.



வ.உ.சி. துறைமுகப் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி வசதியின் தற்போதைய நிலை என்ன? மேலும் அத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் எந்தளவு பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் கேள்வி எழுப்பினார்.

தேசிய அனல் மின் கழகம் (NTPC) மேற்கூறிய துறைமுகத்தில் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி வசதிக்கான பணிகளைத் தொடங்கிவிட்டதா என்றும் அவ்வாறெனில் அந்தப் பணிகளின் தற்போதைய நிலை குறித்த விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் வெளிவட்ட துறைமுக சரக்குப் பெட்டக முனையம் மற்றும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி வசதி போன்ற பெரிய திட்டங்களால் ஏற்படும் சுற்றுசூழல் பாதிப்பை கண்காணிக்கவும் அவற்றை குறைக்கவும் ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை அல்லது வகுக்கபட்ட திட்டம் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

## இந்தியாவின் பொருளாதாரம் – வளர்ச்சிக்கு தமிழ்நாடு குறிப்பிடத்தக்க பங்களிப்பு!

# தமிழ்நாட்டிற்கு நியாயமான நிதிப் பங்களிப்பை ஒன்றிய அரசு வழங்க வேண்டும்!

### மாநிலங்களவையில் – பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச.8-

நாடாளுமன்ற மாநிலங்களவையில் பேசிய கழக உறுப்பினர் பி.வில்சன், “தமிழ்நாடு நீண்டகாலமாக இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி முன்னேற்றத்தின் கலங்கரை விளக்கமாக இருந்து வருகிறது.

ஆயினும்கூட, மாநிலத்திற்கு உரிமையான நிதியினையும் மற்றும் ஆதரவையும் திட்டமிட்டு மறுப்பது மாநிலத்தின் நிதிநிலையை பெரிதும் பாதிக்கிறது.



எனவே, இப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணும் வகையில், தமிழ்நாட்டிற்கு நியாயமான நிதிப்பங்களிப்பையும் ஆதரவையும் வழங்குமாறு துணைத்தலைவர் அவர்கள் வாயிலாக ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டார்.

மாநிலங்களவையில் பி.வில்சன் பேசியதாவது :-

ஒன்றிய அரசினால் புறக்கணிப்பையும், ஏற்றத்தாழ்வையும் தமிழ்நாடு தொடர்ந்து சந்தித்து வருவதால், பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகள் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் முடங்கியுள்ளன.

புதிய ஜிஎஸ்டி நடைமுறையின் கீழ் வாக்குறுதியளிக்கப்பட்ட இழப்பீட்டு பொறிமுறை, 2022ல் ஒன்றிய அரசால் திடீரென நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக தமிழ்நாட்டிற்கு ஆண்டுக்கு ரூ.20,000 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டது. செஸ் மற்றும் கூடுதல் கட்டண வரிகளை ஒன்றிய அரசு அதிக அளவில் சார்ந்திருக்கும் போக்கானது, பகிர்ந்தளிக்கக்கூடிய வரிகளில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கு கிடைப்பதை கடுமையாக கட்டுப்படுத்தியுள்ளது. 202223 நிதியாண்டில், ஒன்றிய அரசு செஸ் மற்றும் கூடுதல் கட்டணங்கள் மூலம் 5.1 லட்சம் கோடியை வசூலித்தது. இந்த வசூல் பங்கீடு செய்யக்கூடிய தொகுப்பில் சேர்க்கப்பட்டிருந்தால், தமிழகத்திற்கு ஒரு வருடத்தில் கூடுதலாக ரூ.20,800 கோடி கிடைத்திருக்கும். மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 3 சதவீதம் உச்சவரம்பு என்பது போன்ற மாநிலங்கள் கடன் பெறும் திறனுக்கான நியாயமற்ற வரம்புகள், கடந்த நான்கு ஆண்டுகளில் கடன் வாங்குவதில் 8,500 கோடி இழப்புக்கு வழிவகுத்துள்ளன. இது முக்கிய பொது உள்கட்டமைப்பு மற்றும் நலத்திட்டங்களுக்கு நிதியளிக்கும் தமிழ்நாட்டின் திறனை பாதிக்கிறது. 202324 ஆம் ஆண்டுக்கான ஒன்றிய பட்ஜெட்டில், வெறும் 2.5% மட்டுமே தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டது, இது போதுமானதல்ல. ஒன்றிய அரசால் நிதியளிக்கப்படும் திட்டங்களுக்கான சுமையை மாநில அரசின் மீது ஒன்றிய அரசு படிப்படியாக மாற்றி வருகிறது.

அதற்கு மிகச்சிறந்த உதாரணம் கூற வேண்டுமென்றால், மலிவு விலை வீடுகள் திட்டத்தில் (Affordable Housing in Partnership) ஒன்றிய அரசு ஒரு வீட்டிற்கு ரூ.1.5 லட்சமும், தமிழக அரசு ரூ .1214 லட்சமும் பங்களிக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ்நாட்டில் ரயில்வே திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு என்பது உத்தரபிரதேசத்திற்கான ஒரு வருட ரயில்வே பட்ஜெட் ஒதுக்கீட்டிற்கு சமமானதாக உள்ளது. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் பல்வேறு முக்கிய ரயில்வே திட்டங்கள் முடங்கியுள்ளன.

தமிழ்நாட்டிற்கு கடந்த 10 ஆண்டுகளாக நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் எதற்கும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை.

ராமேசுவரத்தை முக்கியச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் திட்டத்திற்கு ரூ.99 கோடி, மாமல்லபுரம் கடற்கரை கோயில் நந்தவனம் அமைக்கும் திட்டத்திற்கு ரூ.30 கோடி, நீலகிரி மாவட்டம் பைக்காராவில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் திட்டத்துக்கு 28.3 கோடி உள்ளிட்ட தமிழகத்தில் பல்வேறு சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களுக்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் ஒன்றிய அரசின் உடனடி கவனம் இதற்கு தேவைப்படுகிறது.

மேலும், பரந்தூர் விமான நிலையம், ஒசூர் விமான நிலையம், கிரீன்ஃபீல்ட் கடலூர் துறைமுகம், கோவை, மதுரை மற்றும் ஒசூர் மெட்ரோ திட்டங்கள், கோவை, திருச்சி, மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்கு ஒப்புதல் மற்றும் பணிகளை ஒன்றிய அரசு விரைவுபடுத்த வேண்டும்.

தமிழ்நாடு நீண்ட காலமாக இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி முன்னேற்றத்தின் கலங்கரை விளக்கமாக இருந்து வருகிறது.

ஆயினும்கூட, மாநிலத்திற்கு உரிமையான நிதியினையும் மற்றும் ஆதரவையும் திட்டமிட்டு மறுப்பது மாநிலத்தின் நிதிநிலையை பெரிதும் பாதிக்கிறது.

எனவே, இப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத்தீர்வு காணும் வகையில், தமிழ்நாட்டிற்கு நியாயமான நிதிப்பங்களிப்பையும் ஆதரவையும் வழங்குமாறு துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

## கட்டுப்பாடுகள் இல்லாமல் உயர்த்தப்படும்

# விமானக் கட்டணங்களை முறைப்படுத்த விதிகள் வகுத்திடுவீர்!

### மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 7 -

கட்டுப்பாடுகள் இல்லாமல் உயர்த்தப்படும் விமானக் கட்டணங்களை முறைப்படுத்த விதிகளை வகுக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி. என்.சோமு வலியுறுத்தினார்.



மாநிலங்களவையில் விமானப் போக்குவரத்து மசோதா - 2024 மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது:

பேச்சை தொடங்குவதற்கு முன், நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். இந்த மசோதாவுக்கு பாரதிய வாயுஹான் விதேயக் என்று பெயர் சொல்லவே கஷ்டப்படுகிற அளவுக்கு இந்தியில் பெயர் வைத்திருக்கிறீர்கள். இந்தி பேசாதவர்களுக்கு இந்தியை திணிக்க வேண்டாம். மசோதாக்களுக்கு இந்தி பெயரிடுவதை தவிர்க்க வேண்டும். இந்த மசோதாவுக்கு விமானங்கள் சட்டம் - 2024 ( Aircraft Bill 2024 ) என பெயரிட வேண்டும்.

இந்த மசோதாவின் நோக்கம் இந்தியாவில் விமான வடிவமைப்பு, சோதனை, தொழில்நுட்பம் மற்றும் பிற அம்சங்களை ஒழுங்குபடுத்தி உற்பத்தியை ஊக்குவிப்பதாகும். எனக்கு ஆச்சர்யம் என்னவென்றால்இந்த அரசு சொந்தமாக விமானங்களை உற்பத்தி செய்யவில்லைசொந்த விமானங்கள் இல்லைசொந்தமாக இருந்த விமான நிலையங்களையும் தனியாருக்குத் தாரை வார்த்துவிட்டு எதற்காக இந்த மசோதா என்பதுதான். மேக் இன் இந்தியாஸ்டாண்ட் அப் இந்தியா என்பதெல்லாம் வெற்று கோஷங்களாகத்தான் இருக்கிறது. சுயசார்பு தொடர்புடைய மத்திய அரசின் வாக்குறுதிகள் இன்னும் நிறைவேறவில்லை. விமானத்துறையில் அமெரிக்கா மற்றும் பிரான்சின் உதவியை இந்தியா இன்னும் முழுமையாக நம்புகிறது.

இந்த மசோதா மத்திய அரசுக்கு விமானங்கள் தொடர்பான விதிகளை உருவாக்கும் அதிகாரத்தையும், விமான இயக்கங்களின் பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் விமான விபத்துகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் வழங்குகிறது. ஆரம்ப காலத்திலிருந்தே விமானத் துறை மத்திய அரசின் கீழே தான் உள்ளது. சிவில் விமானப் போக்குவரத்துத் துறையின் கீழ் விமான நிலையங்கள் ஆணையம் முதல் சிவில் விமானப் போக்குவரத்து இயக்குனரகம் வரை சுமார் ஏழு அமைப்புகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. எனவே, இந்த மசோதா புதிய பெயருடன் பழைய கொள்கைகளையே கொண்டிருக்கிறது.

விமான போக்குவரத்து அமைச்சகம் தனது முக்கியத்துவத்தை இழந்துவிட்டது. காரணம்தனியார் நிறுவனங்களுக்கு மிகுந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அரசின் தனியார்மயத்தால், இன்று ஒரு அரசுக்குச் சொந்தமாக ஒரு விமான நிறுவனம் கூட இல்லை. ஏர் இந்தியா மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டது, மேலும் விமான நிலையங்களும் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது மிகவும் துரதிஷ்டவசமானது.

நாளை எவ்விதத்திலாவது மக்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்லும் அவசரத் தேவைக்கு, தனியார் விமான நிறுவனங்களிடம் அரசு உதவி கேட்க வேண்டிய நிலை வரும்.

தற்போது, அரசின் விமானத்தில் பயணிக்கும் வசதி வெறும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு மட்டுமே உள்ளது. மற்றவர்களெல்லாம் தனியார் விமான சேவைகளை மட்டுமே நம்பிக்கொண்டு பயணிக்க வேண்டியுள்ளது.

இந்தியாவில் தரமான விமானிகளின் பற்றாக்குறை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ஆனால்ராஜீவ் காந்தி தேசிய விமானப் பல்கலைக்கழகம் தவிர, சர்வதேச தரத்திலான விமான பயிற்சி நிலையங்கள் வேறு எதுவும் இல்லை. அதிலும் முழுமையான மாற்றங்கள் தேவைப்படுகிறது.

அரசு தற்போது பழமையான பயிற்சி முறைகளை மட்டுமே பயன்படுத்துகிறது. முன்னேற்றம் அடைந்த நாடுகள் விமானிகளுக்கான சிறந்த பயிற்சியைக் கொடுக்க வித்தியாசமான தொழில்நுட்பங்களை, குறிப்பாக விர்ச்சுவல் ரியாலிட்டி மற்றும் சிமுலேட்டிவ் தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றன. அதன் மூலம் விமானம் மற்றும் விமான தொழில்நுட்பத்தின் ஒவ்வொரு சிறிய விவரங்களையும் விமானிகள் புரிந்து கொள்கின்றனர். ஆனால் இந்தியா இந்தத் துறையில் மிகவும் பின் தங்கியுள்ளது. எனவே, இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் விமானப் பயிற்சியின் சமீபத்திய முன்னேற்றங்களைப் பற்றி ஆராய்ந்து, சர்வதேச தரங்களுக்கு ஏற்ப விமானிகளை உருவாக்க புதிய அறிவியல் ரீதியிலான பயிற்சி முறைகளைக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடர் பணி காலங்களில் எளிதாக தரை இறங்கவும், பறக்கவும் அனைத்து விமானங்களிலும் உயர் அடர்த்தி கேமரா சென்சாரை பொருத்தலாம். இந்த புதிய சட்டத்தில் தனியார் விமான நிறுவனங்களின் கொள்ளை லாப நோக்கையும் ஆதிக்கத்தையும் தடுக்கும் விதத்தில் சட்டப் பிரிவுகளைச் சேர்க்க வேண்டும்.

நமக்கு தற்போது அதிக விமான நிலையங்கள் மற்றும் விமான நிறுவனங்கள் தேவை. ஆனால் மிகுந்த கவலைக்குரிய விஷயம் என்னவெனில், இப்போது ஓரிரு நிறுவனங்களின் ஆதிக்கத்தில்தான் விமானச் சேவை இயங்கி வருகிறது. தற்போது, 80% மொத்த பயணிகள் போக்குவரத்து மூன்று நிறுவனங்களின் கையில் உள்ளது. ஏகாதிபத்தியத்தின் தீய விளைவுகள் நம் அனைவருக்கும் தெரியும். இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அரசுகள் விமான துறையில் ஈடுபட வேண்டும். மாநில அரசுகள் விமான நிலையங்கள் கட்டுவதிலும், பராமரிப்பிலும் பங்கு பெற அனுமதிக்க வேண்டும். தனியார் நிறுவனங்களுக்கு விமான நிலையங்களை பார்த்துக் கொள்ள அனுமதிப்பதைப் போல, மாநில அரசுகளை ஏன் அனுமதிக்க முடியாது? மாநில அரசுகள் விமான சேவைகளை இயக்கினால், விமான துறையில் பொருளாதார சமநிலை உருவாகும். இந்த முக்கியமான அம்சத்தை கவனத்தில் கொண்டு ஒன்றிய அரசு முடிவு எடுக்க வேண்டும்.

மற்றொரு முக்கியமான பிரச்சனை என்னவெனில், விமான நிறுவனங்களின் இயக்கவிதிகள். முக்கிய வேலையொன்றுக்காக விமானப் பயணம் செய்ய விரும்பும் பொதுமக்களுக்கு மிகவும் பிரச்னையாக உள்ளன. விமான டிக்கெட் முன்பதிவிற்கு செல்லும் போது ஒரு விலை காட்டுகிறது. ஆனால் புக்கிங் செய்யும்போது சில விநாடிகளில் மிகவும் உயர்ந்த விலையைக் காட்டுகிறது. இந்த நிறுவனங்கள் தங்கள் விதிகளை அப்படி வடிவமைத்துள்ளன. ஒரு சேவைக்கு அதிகமான தேவை இருந்தால் அதன் விலை அதிகரிக்கின்றது. அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் ரயில் டிக்கெட் முன்பதிவிற்கு இப்படி செய்வதில்லை. இந்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் இந்த நடைமுறைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய விமான நிலையங்களில் மற்றொரு முக்கிய பிரச்சனை உணவுப் பொருட்களின் அதிகப்படியான விலை. ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டில் விமான நிலையம் வெளியே ரூ.20 ரூபாய்க்கு கிடைக்கும், ஆனால் அதே பாட்டில் விமான நிலையத்திற்குள் ரூ.100 அல்லது ரூ.150 ஆக விற்பனை யாகிறது. இது ஏற்றுக்கொள்ள முடியாதது. நாம் வெளியில் ரூ.50க்கு இட்லி வாங்கினால், விமான நிலையத்தில் அது ரூ.250 அல்லது ரூ.300க்கு விற்கப்படுகிறது. பொதுமக்கள்உணவு பொருட்களை வாங்கும் போது ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டிய நிலை உள்ளது. ஒன்றிய அமைச்சர் அவர்கள் இதனை முழுமையாக கவனித்து நியாயமான விலைகளில் உணவுகள் விற்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

தமிழ்நாடு மாநிலத்திற்கு தேவையான முக்கியத்துவம் விமான போக்குவரத்து அமைச்சகத்தினால் வழங்கப்படவில்லை. தமிழ்நாட்டின் பல கோரிக்கைகளை ஒன்றிய அரசு பொருட்படுத்துவதில்லை. நமது நாட்டில் தமிழ்நாடு மிகவும் வளர்ந்த மாநிலமாகும். வணிகம், வர்த்தகம், மருத்துவ சிகிச்சை, ஆன்மீகம் மற்றும் சுற்றுலா காரணமாக உள்ளூர் மற்றும் சர்வதேச பயணிகளை தமிழ்நாடு ஈர்க்கின்றது. தற்போது, சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் சர்வதேச விமான நிலையங்கள் செயல்படுகின்றன. தூத்துக்குடி, சேலம், வேலூர், நெய்வேலி போன்ற உள்ளூர் விமான நிலையங்கள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை. தமிழ்நாட்டுக்கு வரும் மற்றும் அங்கிருந்து செல்லும் சர்வதேச மற்றும் உள்ளூர் பயணிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. எனவே சர்வதேச விமானப் பாதைகளில் மேலும் விமானங்கள் இயக்கவும், உள்ளூர் முக்கிய நகரங்களுடன் தொடர்புடைய விமான சேவைகளை முழுமையாக வழங்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒசூர் நகரில் ஒரு சர்வதேச விமான நிலையத்தை நிறுவ தமிழ்நாடு அரசின் விருப்பத்தை தெரிவித்திருந்தார். இந்த விவகாரத்தை ஒன்றிய அரசு உடனடியாக எடுத்துக்கொண்டு, ஓசூரில் சர்வதேச விமான நிலையம் நிறுவ அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் சென்னை உட்பட்ட முக்கிய நகரங்களில் ஏர் டாக்ஸிகள் அறிமுகப்படுத்துவதற்கான தேவை இருக்கிறது. எனவே, அதற்குத் தேவையான நடவடிக்கைகளை விமான போக்குவரத்து துறை அமைச்சர் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.



## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திண்டுக்கல் ம.பசீர் அகமது

டிசம்பர் 8 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டதோடு, கழக தொழிற் சங்கத்தில் பணியாற்றியவர்.

மாவட்ட பிரதிநிதி, நகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் மாவட்ட அவைத்தலைவர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.

தொ.மு.ச. பேரவையின் துணைத் தலைவர், தொ.மு.ச. பேரவை தமிழ் மாநிலக்குழு தலைவர், மாவட்ட பஞ்சாலை தொழிற் சங்க தலைவர் என தொழிற் சங்கத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இரண்டு முறை திண்டுக்கல் நகர்மன்றத் தலைவராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.


## திருவொற்றியூர் கிழக்குப் பகுதி துணைச் செயலாளர்

# ஆர்.எஸ்.சம்பத் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச.8-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி துணைச் செயலாளர் ஆர்.எஸ்.சம்பத், 5.12.2024 வியாழக்கிழமை அன்று காலை 6.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 63.

மறைந்த ஆர்.எஸ்.சம்பத்துக்கு எழிலரசி எனும் மனைவியும், எஸ்.தினேஷ்குமார் எனும் மகனும், எஸ்.நர்மதா எனும் மகளும் உள்ளார்கள்.

கழக முன்னோடி ஆர்.எஸ்.சம்பத், 50 ஆண்டு கால கழகத் தோழர் ஆவார். இளைஞர் அணியின் வட்ட அமைப்பாளராகவும் ‘இளைய சூரியன்’ வார இதழின் முகவராகவும் இருந்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர்.

கொண்ட கொள்கையிலிருந்து கிஞ்சிற்றும் வழுவாத கழக முன்னோடியான ஆர்.எஸ்.சம்பத் மறைவுற்ற செய்தியறிந்து கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருந்தினார்.

அன்னாரின் துணைவியார் திருமதி எழிலரசி உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதலையும், அன்னாரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டுள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாபெரும் இரத்ததான முகாம் ஆசாரிபள்ளம் பகுதியில் அமைந்துள்ள கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாவட்ட இளைஞர் துணை அமைப்பாளர் செ.சரவணன் தலைமையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு இரத்ததான முகாமை துவக்கி வைத்தார். முகாமில் இளைஞர்கள் உட்பட 47 பேர் இரத்த தானம் செய்தனர். நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் ஜெ.ஹெலன் டேவிட்சன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், ஆர்.சதாசிவன், வி.அகஸ்தீசன், மருத்துவர் சொ.சுரேஷ், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.